www.Padasalai.Net www.TrbTnpsc.com

சுருக்கம்

பள்ளிக் கல்வி – தொடக்கக் கல்வி – மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 2025-2026- மாணவர்களின் அறிவுத் தேடல் மற்றும் வாசிப்புத் திறன்களை மேம்படுத்த தேவையான பொருண்மைகளுக்கான பாட விவரங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வடிவமைத்து, இத்திட்டத்தினை பள்ளிகளில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் வாயிலாக செயல்படுத்துதல் – தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (தொ.க.3(2)) துறை

அரசாணை (நிலை) எண். 121

நாள் 19.05.2025
திருவள்ளுவர் ஆண்டு–2056
விசுவாவசு வருடம், வைகாசி 05
படிக்கப்பட்டவை:

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.9111/கே2/2025, நாள் 05.05.2025.

/////

ஆணை:-

2025-2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

"வாசிப்பு இயக்கம் மூலம் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து புத்தகங்களையும் மாணவர்கள்

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வாசிக்கும் விதத்தில் கதை சொல்லும் அமர்வுகள் (Story Telling Sessions), வாசிப்பு சவால்கள் (Reading Challenges), புத்தக கழகங்கள் (Book Clubs) ஆகியவற்றின் மூலம் அறிவுத் தேடல் மற்றும் கருப்பொருள் வாசிப்பு வாரம் (Themed Reading Week) செயல்படுத்தப்படும். இதன் அடிப்படையில் மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் ஒரு தலைப்பின் கீழ் தேசத் தலைவர்கள், அறிவியல் அறிஞர்கள், விளையாட்டு வீரர்கள், பிடித்த விளையாட்டுகள், சுற்றுச்சூழல் மற்றும் நடப்பு நிகழ்வுகள் முதலியவற்றில் பேச்சுப் போட்டி, கதை சொல்லுதல், நடித்துக் காட்டுதல், குழு விவாதம் மற்றும் பட்டிமன்றம் ஆகியவற்றின் மூலம் வாசிப்புத் திறன்கள் மேம்படுத்தப்படும் (Enhancing students curiosity and reading proficiency through effective use of school libraries)."

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக தொடக்கக்கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மேலே படிக்கப்பட்ட கருத்துருவில், மாணவர்களின் அறிவுத் தேடல் மற்றும் வாசிப்பு திறன்களை மேம்படுத்த பருவம், மாதம், வாரம் மற்றும் வகுப்பு வாரியாக உள்ள பொருண்மைகளுக்கான பாட விவரங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வடிவமைக்கவும் பள்ளிகளில் இத்திட்டத்தினை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் வாயிலாக செயல்படுத்தவும் அனுமதி ஆணை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. மாணவர்களின் அறிவுத் தேடல் மற்றும் வாசிப்புத் திறன்களை மேம்படுத்த இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பருவம், மாதம், வாரம் மற்றும் வகுப்பு வாரியாக உள்ள பொருண்மைகளுக்கான பாட

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

விவரங்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வடிவமைக்கவும், இத்திட்டத்தினை பள்ளிகளில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் வாயிலாக செயல்படுத்தவும் அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம், சென்னை-6.
இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை-6.
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
அலுவலக நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர்
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்(வரவு/செலவு)துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்(SSA)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/5/25

பிரிவு அலுவலர்

19.5.25

www.Padasalai.Net

அரசாணை (நிலை) எண்.121, பள்ளிக் கல்வித் (தொக3(2)) துறை, நாள் 19.05.2025ன் இணைப்பு

## பருவவாரியான தலைப்புகள்

| பருவம்/ மாதம்/ வாரம் | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 | வகுப்பு 7 | வகுப்பு 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **முதற்பருவம் - ஜூன் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | எனக்கு பிடித்த விளையாட்டு | எனக்கு பிடித்த விளையாட்டு | எனக்கு பிடித்த விளையாட்டு | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | விடுமுறை நாள் அனுபவங்கள் | விடுமுறை நாள் அனுபவங்கள் | விடுமுறை நாள் அனுபவங்கள் |
| இரண்டாம் வாரம் | காற்று அடிப்படை தகவல் - பேசுதல் | காற்று குறித்து சங்கிலி தொடர் பேச்சு - உரையாடல் முறை | காற்றின் பயன்கள் - பேசுதல் | காற்று எவ்வாறு மாசடைகிறது - குழு விவாதம் | காற்று மாசுபாட்டினை தவிர்க்கும் முறைகள் - பேச்சு போட்டி | காற்று மாசுபாடு - பேச்சு போட்டி | காற்று மாசுபாட்டால் ஏற்படும் தீமைகள் - கலந்துரையாடல் | காற்று மாசுபாட்டினை குறைக்கும் நடவடிக்கைகள் - விவாதம் |
| மூன்றாம் வாரம் | படம் பார்த்து கதை கூறுதல் | படம் பார்த்து கதை கூறுதல் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | மிதிவண்டியின் பயன்கள் | மிதிவண்டி - உடற்பயிற்சிக்கு சிறந்த வாகனம் - விவாதம் | ஓசோன் பாதுகாப்பு - பேச்சு போட்டி | உணவு பாதுகாப்பு - பேச்சு போட்டி | காயிதே மில்லத் அவர்களின் தொண்டுள்ளம் - பேச்சு போட்டி |
| நான்காம் வாரம் | உடல் உறுப்புகள் | எனக்கு பிடித்த விலங்கு | எனக்கு பிடித்த பழங்கள் | உடலினை உறுதி செய் - பேச்சு போட்டி | மனநலம் காத்தலின் அவசியம் - கலந்துரையாடல் | காடுகளை பாதுகாத்தல் | வனவிலங்குகளை பாதுகாத்தல் | விவரங்களை கையாளுதல் - விவாதம் |
| **முதற்பருவம் - ஜூலை மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | குடும்ப உறுப்பினர்கள் / உறவு முறை | குடும்ப உறவு முறை - நடித்தல் | உன்னை அறிந்து கொள் | பனை மரத்தின் சிறப்பு | மக்கள் தொகைப் பெருக்கம் - பேச்சு போட்டி | மறுசுழற்சியின் தேவை - விவாதம் | நெகிழியின் தீமைகள் - பேச்சு போட்டி | நெகிழியைத் தவிர்ப்போம் குழு விவாதம் |
| இரண்டாம் வாரம் | காமராசர் பற்றி பேசுதல் | எனக்கு பிடித்த நண்பன் | கடையெழு வள்ளல்கள் பேசுதல் | தேசத் தலைவர் - மகாத்மா காந்தி | காமராசர் - பேச்சு போட்டி | பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு - காமராசரின் பங்கு | நீர்வள மேலாண்மைக்கு காமராசர் பங்காற்றிய விதம் - குழு விவாதம் | தமிழ்நாட்டின் தொழிற் வளர்ச்சிக்கு காமராசர் ஆற்றிய பணிகள் - பேச்சு போட்டி |
| மூன்றாம் வாரம் | எனக்கு பிடித்த நண்பன் | அறிவியல் அறிஞர் - பேசுதல் | நெகிழியைத் தவிர்ப்போம் | தமிழ்நாடு - அரசு சின்னங்கள் | நேர்மையின் சிறப்பு - விவாதம் | நாடுகளுக்கிடையே போரினால் ஏற்படும் பாதிப்புகள் - கலந்துரையாடல் | மலாலா குறித்து கலந்துரையாடல் | நெல்சன் மண்டேலா உலகிற்கு ஆற்றிய தொண்டு |
| நான்காம் வாரம் | அறிவியல் அறிஞர் - பேசுதல் | தமிழ்நாடு - அரசு சின்னங்கள் | தேசிய விலங்கு - புலி | தெனாலி ராமன் - நடித்துக் காட்டல் | கல்வியின் சிறப்பு - குழு விவாதம் | சதுரங்க விளையாட்டின் சிறப்புகள் | அறிவியல் அறிஞர் - ரூதர்போர்ட் | தாவர உலகம் - பூஞ்சைகளின் நன்மைகள் குழு விவாதம் |
| **முதற்பருவம் - ஆகஸ்ட் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | எனக்கு பிடித்த விலங்கு | எனக்கு பிடித்த தாவரம் | பொருட்களின் நிலைகள் - கலந்துரையாடல் | நண்பர்களின் திறமை - விவரித்தல் | நுரையீரலை பாதுகாத்தல் | இணையத்தின் பயன்கள் | இணையம் மனித குலத்திற்கு வரமா - விவாதம் | இணையம் மனித குலத்திற்கு நன்மை - பேச்சு போட்டி |
| இரண்டாம் வாரம் | தேசத் தலைவர் - ஜவகர்லால் நேரு | தேசத் தலைவர் - மகாத்மா காந்தி | ஏற்றத்தாழ்வு களையும் பெரியாரின் சிந்தனைகள் - குழு விவாதம் | தேசத் தலைவர் - பாபா சாகிப் அம்பேத்கர் | தேசத் தலைவர் - நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் | தேசத் தலைவர் - பால கங்காதர திலகர் | சுதந்திரப் போராட்டத்தில் திருப்பூர் குமரனின் பங்கு | வ.உ.சிதம்பரனார் இந்தியா சுதந்திரம் பெற நடத்திய அறப்போராட்டங்கள் |
| மூன்றாம் வாரம் | இயற்கை அளித்த கொடை விவரித்தல் | சனநாயகம் | யானைகளின் உலகம் | சகோதர - சகோதரிகளின் அன்பு | சகோதர - சகோதரிகளின் அன்பு | ரக்ஷா பந்தன் - உனது பார்வை | ரக்ஷா பந்தன் சகோதர - சகோதரிகளின் அன்பு ஏன் | சமுதாயப் பண்டிகையா ரக்ஷா பந்தன் - குழு விவாதம் |
| நான்காம் வாரம் | அன்னைத் தெரசா - பேசுதல் | அன்னைத் தெரசா - பேசுதல் | அன்னைத் தெரசா அவர்களின் சேவை | அன்னைத் தெரசா - பேச்சு போட்டி | அன்னைத் தெரசா - பேச்சு போட்டி | அன்னைத் தெரசாவின் தன்னலமற்ற சேவை | அன்னைத் தெரசாவின் தன்னலமற்ற சேவை | அன்னைத் தெரசாவின் தன்னலமற்ற சேவை |

www.Padasalai.Net

| பருவம்/ மாதம்/ வாரம் | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 | வகுப்பு 7 | வகுப்பு 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **முதற்பருவம் - செப்டம்பர் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | எனக்கு பிடித்த ஆசிரியர் | எனக்கு பிடித்த ஆசிரியர் | ஆசிரியர் தினத்தன்று நடந்து கொள்ளும் முறை | டாக்.இராதாகிருஷ்ணன் - பட்டிமன்றம் | டாக.இராதாகிருஷ்ணன் - பட்டிமன்றம் | டாக்.இராதாகிருஷ்ணன் - நடித்துக் காட்டல் | டாக்.இராதாகிருஷ்ணன் - வாழ்க்கை வரலாறு | டாக்.இராதாகிருஷ்ணனி உயர்ந்த உள்ளம் - பேச் போட்டி |
| இரண்டாம் வாரம் | அறிஞர் அண்ணா - பேசுதல் | அறிஞர் அண்ணா - பேசுதல் | அறிஞர் அண்ணா - பேசுதல் | அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் | அறிஞர் அண்ணாவின் தமிழ்பற்று | அறிஞர் அண்ணாவின் ஆங்கிலப் புலமை | அறிஞர் அண்ணாவின் சமுதாயத் தொண்டு | அறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சர் - எனது பார்வை |
| மூன்றாம் வாரம் | சுற்றுச் சூழல் | உள்ளூர் விளையாட்டுகள் | கால்பந்து விளையாட்டு | ஹாக்கி - தேசிய விளையாட்டு | ஓசோன் பாதுகாப்பு - பேச்சு போட்டி | சமத்துவம் காப்போம் - பேச்சு போட்டி | பெண்கள் முன்னேற்றத்தில் பெரியாரின் பங்கு - குழு விவாதம் | சர்வதேச அமைதி தினம் பேச்சு போட்டி |
| நான்காம் வாரம் | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை | காலாண்டு விடுமுறை |
| **2ஆம் பருவம் - அக்டோபர் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | தேசத் தலைவர் - மகாத்மா காந்தி | காந்தியடிகளைப் போல் நடித்துக் காட்டல் | பெரியோர்களை மதித்தல் | பருத்தியாடைகளின் முக்கியத்துவம் | சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் பங்கு - பேச்சு போட்டி | காந்தியடிகள் அஹிம்சை முறை - குழு விவாதம் | காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டம் - பட்டிமன்றம் | அறிவியல் அறிஞர் - நீல்ஸ்:.போர் பிறந்த தினம் 07.10.1885 (குவாண்டம் கொள்கை) |
| இரண்டாம் வாரம் | நல்ல பழக்க வழக்கங்கள் - கை கழுவுதல் | தன் சுத்தம் | பெண் குழந்தைகளை போற்றுவோம் | இயற்கை உரத்தின் பயன்கள் - பேசுதல் | மோட்டார் மன்னன் - ஹென்றி போர்ட் | வள்ளலார் ஆற்றிய பெருந்தொண்டு | வள்ளலாரின் வாழ்க்கை முறை பேச்சு போட்டி | வள்ளலாரின் வாழ்க்கை முறை பேச்சு போட்டி |
| மூன்றாம் வாரம் | கிரிக்கெட் விளையாட்டு | இறகு பந்து விளையாட்டு | கபடி விளையாட்டு | பனிப் பிரதேச விலங்குகள் | அறிவியல் அறிஞர் - சர் ஐசக் நியூட்டன் | நூலகத்தின் பயன்கள் - பேச்சு போட்டி | சிறுசேமிப்பின் பயன்கள் - பேச்சு போட்டி | தமிழர்களின் இசைக் கருவிகள் - குழு விவாதம் |
| நான்காம் வாரம் | விமானம் | உண்மை பேசுதல் | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - கருத்து பரிமாற்றம் | பறவைகளை பாதுகாக்கும் வகையில் தீபாவளி கொண்டாடுதல் - கலந்துரையாடல் | மாசற்ற தீபாவளி - விவாதம் | எனக்கு பிடித்த திருநாள் | எனக்கு பிடித்த திருநாள் | எனக்கு பிடித்த திருநாள் |
| **2ஆம் பருவம் - நவம்பர் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | மழைக் கால முன்னெச்சரிக்கை | பாரதியார் பாடல்கள் | கிராம சபைக் கூட்டம் | அறிவியல் அறிஞர் - தாமஸ் ஆல்வா எடிசன் | தமிழர்களின் வீரக் கலைகள் | நிலக்கரியின் பயன்கள் - பேச்சு போட்டி | அபுல் கலாம் ஆசாத் - பேச்சு போட்டி | தேசிய கல்வி தினம் - அபுல் கலாம் ஆசாத் - குழு விவாதம் |
| இரண்டாம் வாரம் | குழந்தைகள் தினம் | குழந்தைகள் தினம் | குழந்தைகள் தினம் | திருவள்ளுவர் - கல்வியின் சிறப்பு குறித்த குறள் | நேருவின் குழந்தை நேயம் | அறிவியல் தினம் - பேச்சு போட்டி | அறிவியல் தினம் - குழு விவாதம் | அறிவியல் தினம் - பட்டிமன்றம் |
| மூன்றாம் வாரம் | பள்ளி காலை வணக்கக் கூட்டம் - ஒழுங்கு | உலக தொலைக்காட்சி நாள் | மீனவர்களின் வாழ்க்கை முறை | இந்திரா காந்தி - பிறந்த தினம் - பேச்சு போட்டி | தேசிய ஒருமைப்பாட்டு தினம் | தேசிய மாணவர் படை | சுனாமி விழிப்புணர்வு - குழு விவாதம் | புற்றுநோய் விழிப்புணர்வு - குழு விவாதம் |
| நான்காம் வாரம் | தமிழர் பாரம்பரிய உடைகள் | செய்தித்தாள் - பயன்கள் | தொலைக்காட்சியின் பயன்கள் | செல்பேசியின் பயன்கள் | வெண்மைப் புரட்சி - பேச்சு போட்டி | வெண்மைப் புரட்சி - பேச்சு போட்டி | மின் விநோகம் செய்யப்படும்முறை - குழு விவாதம் | அறிவியல் அறிஞர் - ஆல்பர்ட் ஐன்ஸ்டின் |
| **2ஆம் பருவம் - டிசம்பர் மாதம்** | | | | | | | | |

www.Padasalai.Net

| பருவம்/ மாதம்/ வாரம் | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 | வகுப்பு 7 | வகுப்பு 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் வாரம் | கப்பல் | சிறுசேமிப்பு | பணிவுடைமையே சிறந்த பண்பு | மனுநீதி சோழன் - கதை கூறுதல் | கொடி நாள் | இந்தியக் கடற்படை தினம் - குழு விவாதம் | உலக மண் தினம் விழிப்புணர்வு - குழு விவாதம் | உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு - குழு விவாதம் |
| இரண்டாம் வாரம் | இளநீர் | மயில் | ஓநாய் / நாய் கதை கூறுதல் | நீர் சுழற்சி - குழு விவாதம் | என்னைக் கவர்ந்த புத்தகம் | மனித உரிமைகள் தினம் | பாரதியாரின் சுதந்திர வேட்கை - பேச்சு போட்டி | பாரதியார் கவிதைகள் - குழு விவாதம் |
| மூன்றாம் வாரம் | அறுசுவை - கூறுதல் | ஆத்திசூடி | விடுகதைகள் கூறுதல் | தாவரங்களின் வகைப்பாடு | நீர் மேலாண்மை | கணினியின் பயன்கள் - பேச்சு போட்டி | உயிரியல் பூங்கா - கலந்துரையாடல் | அமிலங்கள் / காரங்கள் - பட்டிமன்றம் |
| நான்காம் வாரம் | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை | அரையாண்டு விடுமுறை |

**3ஆம் பருவம் - சனவரி மாதம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் வாரம் | பறவைகள் தினம் | பறவைகள் தினம் | கணினியின் பயன்கள் | செயற்கைக் கோள் | கடையெழு வள்ளல்கள் | காந்தி அருங்காட்சியகம் | சாலை பாதுகாப்பு வாரம் ஏன் கொண்டாடுகிறோம் | சாலை பாதுகாப்பு வாரம் ஏன் கொண்டாடுகிறோம் |
| இரண்டாம் வாரம் | நிலா | சூரிய காந்தி பூ | நல்லன நினை | பொங்கல் திருநாள் | பொங்கல் திருநாள் | திருவள்ளூர் தினம் | திருவள்ளூர் தினம் | தேசிய இளைஞர் தினம் |
| மூன்றாம் வாரம் | திசைகள் | எறும்புகள் | மழைநீர் சேமிப்பு | மாசில்லா உலகு - பேச்சு போட்டி | பறவைப் பண்ணைகள் - குழு விவாதம் | இந்திய சுதந்திரப் போரில் வீராங்கனைகள் | தமிழ்நாட்டில் எனக்கு பிடித்த மாவட்டம் | தேசிய வாக்காளர் தினம் |
| நான்காம் வாரம் | இனிப்பு பண்டங்கள் | வரிக்குதிரை | குடியரசு தினம் - பேச்சு போட்டி | தேசத் தலைவர்கள் போல் நடித்துக் காட்டல் | தேசத் தலைவர்கள் போல் நடித்துக் காட்டல் | குடியரசு தினம் - பேச்சு போட்டி | தீண்டாமை ஒழிப்பு தினம் | குடியரசு தினம் - பேச்சு போட்டி |

**3ஆம் பருவம் - பிப்ரவரி மாதம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் வாரம் | தமிழ் மாதங்கள் | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | எனக்கு பிடித்த விளையாட்டு வீரர் | இந்திய கடலோர காவல்படை தினம் - நடித்துக் காட்டுதல் | உலக ஈர நில தினம் - குழு விவாதம் | உலக ஈர நில தினம் - பட்டிமன்றம் |
| இரண்டாம் வாரம் | வண்ணங்களின் பெயர்கள் | எனக்கு பிடித்த உணவினை செய்ய தேவைப்படும் பொருட்கள் | அறிவியல் அறிஞர் - அப்துல் கலாம் | அறிவியல் அறிஞர் - அப்துல் கலாம் | அறிவியல் அறிஞர் - சர்சி.வி.ராமன் | அறிவியல் அறிஞர் - சர்சி.வி.ராமன் | கணித மேதை ராமானுஜம் | அறிவியல் அறிஞர் - விக்ரம் சாராபாய் |
| மூன்றாம் வாரம் | தாய்மொழி தினம் | தாய்மொழி தினம் | தாய்மொழி தினம் - குழு விவாதம் | தாய்மொழி தினம் - பேச்சு போட்டி | தாய்மொழி தினம் - பட்டிமன்றம் | தாய்மொழி வழிக் கல்வியே சிறந்த புரிதலை உருவாக்கும் - குழு விவாதம் | தாய்மொழி வழிக் கல்வியே சிறந்த புரிதலை உருவாக்கும் - குழு விவாதம் | தாய்மொழி வழிக் கல்வியே சிறந்த புரிதலை உருவாக்கும் - குழு விவாதம் |
| நான்காம் வாரம் | ஆங்கில மாதங்கள் | விடுமுறையில் மேற்கொண்ட பயணம் | உள்ளூர் விளையாட்டு போட்டிகள் | மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் | தேசிய விளையாட்டு போட்டிகள் | ஆசிய விளையாட்டு போட்டிகள் | உலக தடகள போட்டிகள் | ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் |

**3ஆம் பருவம் - மார்ச் மாதம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் வாரம் | கடிகாரம் | தொடர்வண்டி | வினாடி வினா | பெண்கள் தினம் | அறநெறி கருத்துகள் - கலந்துரையாடல் | ஆசியஜோதி | தீ விபத்து - விழிப்புணர்வு நடவடிக்கைகள் | புதுமைப்பித்தனின் தமிழ் நயம் - கலந்துரையாடல் |

| பருவம்/ மாதம்/ வாரம் | வகுப்பு 1 | வகுப்பு 2 | வகுப்பு 3 | வகுப்பு 4 | வகுப்பு 5 | வகுப்பு 6 | வகுப்பு 7 | வகுப்பு 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| இரண்டாம் வாரம் | வடிவங்கள் | நீர்நிலைகள் காப்போம் | நகைச்சுவை | மரம் வளர்ப்போம் - பேச்சு போட்டி | பாரதிதாசன் - சிறந்த கவி | கைலாஷ் சத்யார்த்தி | அறிவியல் அறிஞர் - அலெக்சாண்டர் ஃப்ளெமிங் | மேத்தாவின் புதுக் கவிதைகள் - குழு விவாதம் |
| மூன்றாம் வாரம் | வண்ணத்துப் பூச்சி | நகைச்சுவை | சிட்டுக்குருவிகள் காப்போம் | பாரம்பரிய விளையாட்டுகள் | பிறருக்கு உதவுதல் | உடல் உறுப்பு தானம் | வண்ண வண்ண சுடர்கள் - குழு விவாதம் | உலக வன தினம் |
| நான்காம் வாரம் | வௌவால் | வினாடி வினா | கோடை வெயில் அதிகரிக்க காரணம் யார் - குழு விவாதம் | அறிவே ஆயுதம் - குழு விவாதம் | தன்னம்பிக்கை | கனிம உரங்கள் | அமைதிப் பட்டு / அகிம்சை பட்டு - பட்டிமன்றம் | உலக தண்ணீர் தினம் |
| **3ஆம் பருவம் - ஏப்ரல் மாதம்** | | | | | | | | |
| முதல் வாரம் | வானொலி | தொலைக்காட்சி | கைபேசி | காற்றின் உட்கூறுகள் | செஸ் விளையாட்டு வீரர் - விஸ்வநாதன் ஆனந்த் | தேசிய விளையாட்டு - ஹாக்கி | தேசிய நூலக தினம் | ப்ளூ கிராஸ் - கலந்துரையாடல் |
| இரண்டாம் வாரம் | தொலைக்காட்சி | கைபேசி | கணினி / மடி கணினி | சதுரங்க விளையாட்டு | சட்ட மேதை அம்பேத்கர் | கணினி - இயக்க மற்றும் பயன்பாட்டு மென்பொருள் - குழு விவாதம் | கணினி மனிதனுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்பை தடுக்கிறது - குழு விவாதம் | உயிர்கோளக் காப்பகங்கள் நடைமுறையில் அவசியமா - குழு விவாதம் |
| மூன்றாம் வாரம் | தேர்வு | தேர்வு | தேர்வு | தேர்வு | தேர்வு | தேர்வு | தேர்வு | தேர்வு |
| நான்காம் வாரம் | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை | கோடை விடுமுறை |

சந்தர மோகன். B,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

www.Padasalai.Net